**சுருக்கம்**

உயர்கல்வித் துறை - 2022-23 ஆம் ஆண்டு மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பு - தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம் - சிறைக் கைதிகள், திருநங்கைகள் மற்றும் ஆதரவற்ற விதவைகளின் சேர்க்கை விகிதத்தை உயர்த்துவதற்காக, கட்டணமின்றி பயின்று பட்டம் பெறும் திட்டம் செயல்படுத்துதல் - நிர்வாக அனுமதி – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**உயர்கல்வித் (கே1) துறை**

அரசாணை (நிலை) எண். 90

நாள்: 07.06.2022.
சுபகிருது வருடம், வைகாசி – 24
திருவள்ளுவராண்டு, 2053

படிக்கப்பட்டவை :

1. 2022-23 ஆம் ஆண்டு உயர்கல்வித் துறை மானியக் கோரிக்கை எண்.20, மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பு, நாள் 11.04.2022.
2. தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகப் பதிவாளரிடமிருந்து பெறப்பட்ட கடித எண். தநாதிநிபக/அரசு/2022, நாள் 16.05.2022

-----

**ஆணை:**

11.04.2022 அன்று 2022-23-ஆம் ஆண்டிற்கான உயர்கல்வித் துறை மானியக் கோரிக்கை விவாதத்தின்போது, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் அவர்களால் மற்றவைகளுக்கிடையே பின்வரும் அறிவிப்பு வெளியிடப்பட்டது :-

"சிறைக் கைதிகள், திருநங்கைகள் மற்றும் ஆதரவற்ற விதவைகளின் சேர்க்கை விகிதத்தை உயர்த்துவதற்காக, தமிழ்நாடு திறந்தநிலை பல்கலைக்கழகத்தில் கட்டணமின்றி பயின்று பட்டம் பெறும் திட்டம் அறிமுகப்படுத்தப்படும்."

...2

2. மேற்கண்ட அறிவிப்பினைத்தொடர்ந்து மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தின் பதிவாளர், சிறைக் கைதிகள், திருநங்கைகள் மற்றும் ஆதரவற்ற விதவைகளின் சேர்க்கை விகிதத்தை உயர்த்துவதற்காக, தமிழ்நாடு திறந்தநிலை பல்கலைக்கழகத்தில் கட்டணமின்றி பயின்று பட்டம் பெறும் திட்டத்தினை, வரும் கல்வியாண்டு 2022-23 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தும்வகையில், இத்திட்டம் தொடர்பான கீழ்க்காணும் திட்ட அறிக்கையினை அனுப்பியுள்ளார்:-

<u>திட்ட அறிக்கை :-</u>

<u>சிறைக்கைதிகள் கட்டணமின்றி பயின்று பட்டம் பெறும் திட்டம்</u>

சிறைக்கைதிகளின் வாழ்வை புனரமைத்து அவர்களுக்கு மறுமலர்ச்சி ஏற்படுத்தும் வகையில் தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தில் வழங்கப்படும் பட்டப்படிப்புகளில் கட்டணமின்றி சேர்க்கைப் பெறுவதற்கான செயல்முறைகள் :-

- தமிழக சிறைச்சாலைகளில் உள்ள, வாழ்நாள்/குறுகிய கால சிறைக்கைதிகளுக்கு, இத்திட்டம் பொருந்தும்.
- பட்டப்படிப்பில் சேருவதற்கான விண்ணப்பப் படிவத்தை அந்தந்த சிறை அதிகாரிகளின் ஒப்புதலோடு பல்கலைக்கழகத்திற்கு அனுப்ப வேண்டும்.
- விண்ணப்பிக்க விரும்பும் பட்டப்படிப்புக்கு உரிய அடிப்படை கல்வித் தகுதியைப் பெற்றிருக்க வேண்டும்.
- இளநிலை, முதுநிலை, சான்றிதழ் பட்டயம், முதுநிலை பட்டயம், தொழிற்பட்டயம், உயர் தொழிற் பட்டயம் ஆகிய படிப்புகளுக்கு மட்டுமே இத்திட்டம் பொருந்தும்.
- கற்றல் ஆலோசனை வகுப்புகள் மற்றும் தேர்வுகள் அந்தந்த சிறைச்சாலைகளிலேயே சிறை அதிகாரிகளை ஆசிரியர்களாகவும், கண்காணிப்பாளராகவும் கொண்டு முறையே நடத்தப்படும்.
- விண்ணப்பக் கட்டணம், பதிவுக் கட்டணம், சேர்க்கைக் கட்டணம், படிப்பு கட்டணம் மற்றும் தேர்வுக் கட்டணம் ஆகியவற்றிலிருந்து விலக்கு அளிக்கப்படும். இருந்தபோதிலும் சான்றிதழ் கட்டணம் (Convocation Fee) செலுத்த வேண்டும்.
- படிப்பின் காலத்தில் ஒரு சிறைக் கைதி விடுதலை செய்யப்பட்டால், அவர் மற்ற மாணவர்களைப் போலவே கருதப்படுவார், எனவே, மீதம் இருக்கக் கூடிய படிப்பு காலத்திற்கான அனைத்து கட்டணத்தையும் முழுமையாக செலுத்த வேண்டும்.
- இத்திட்டத்தில் சேரும் சிறைத்கைதிகள் தங்கள் வாழ்நாளில் ஒரே ஒரு முறை மட்டுமே இக்கட்டண விலக்கைப் பெற முடியும்.

...3

**<u>திருநங்கைகள் கட்டணமின்றி பயின்று பட்டம் பெறும் திட்டம்</u>**

சமூகத்தில் அனைவருக்கும் சமவாய்ப்பு வழங்கப்படும் நோக்கில் திருநங்கைகளுக்கு கட்டணமின்றி உயர்கல்வி பயிலும் வாய்ப்பை வழங்குவதற்கான செயல்முறைகள் :-

- திருநங்கைகள், தான் திருநங்கை என்பதற்கான ஒன்றிய / மாநில அரசால் வாங்கப்பட்ட உரிய சான்றிதழை விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டும்.
- விண்ணப்பிக்க விரும்பும் பட்டப்படிப்புக்கு உரிய அடிப்படை கல்வித் தகுதியைப் பெற்றிருக்க வேண்டும்.
- இளநிலை, முதுநிலை, சான்றிதழ் பட்டயம், முதுநிலை பட்டயம், தொழிற்பட்டயம், உயர் தொழிற் பட்டயம் ஆகிய படிப்புகளுக்கு மட்டுமே இத்திட்டம் பொருந்தும்.
- கற்றல் ஆலோசனை வகுப்புகள் மற்றும் தேர்வுகள் பல்கலைக்கழகத்தால் ஒதுக்கீடு செய்யப்படும் மையத்தில் நடைபெறும்.
- விண்ணப்பக் கட்டணம், பதிவுக் கட்டணம், சேர்க்கைக் கட்டணம், படிப்பு கட்டணம் மற்றும் தேர்வுக் கட்டணம் ஆகியவற்றிலிருந்து விலக்கு அளிக்கப்படும். இருந்தபோதிலும் சான்றிதழ் கட்டணம் (Convocation Fee) செலுத்த வேண்டும்.
- இத்திட்டத்தில் சேரும் திருநங்கைகள் தங்கள் வாழ்நாளில் ஒரே ஒரு முறை மட்டுமே இக்கட்டண விலக்கைப் பெற முடியும்.

**<u>ஆதரவற்ற விதவைகள் கட்டணமின்றி பயின்று பட்டம் பெறும் திட்டம்</u>**

- ஆதரவற்ற விதவை என்பதற்கான ஒன்றிய / மாநில அரசால் வழங்கப்பட்டுள்ள உரிய சான்றிதழை விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டும்.
- விண்ணப்பிக்க விரும்பும் பட்டப்படிப்புக்கு உரிய அடிப்படை கல்வித் தகுதியைப் பெற்றிருக்க வேண்டும்.
- இளநிலை, முதுநிலை, சான்றிதழ் பட்டயம், முதுநிலை பட்டயம், தொழிற்பட்டயம், உயர் தொழிற் பட்டயம் ஆகிய படிப்புகளுக்கு மட்டுமே இத்திட்டம் பொருந்தும்.
- கற்றல் ஆலோசனை வகுப்புகள் மற்றும் தேர்வுகள் பல்கலைக்கழகத்தால் ஒதுக்கீடு செய்யப்படும் மையத்தில் நடைபெறும்.
- விண்ணப்பக் கட்டணம், பதிவுக் கட்டணம், சேர்க்கைக் கட்டணம், படிப்பு கட்டணம் மற்றும் தேர்வுக் கட்டணம் ஆகியவற்றிலிருந்து விலக்கு அளிக்கப்படும். இருந்தபோதிலும் சான்றிதழ் கட்டணம் (Convocation Fee) செலுத்த வேண்டும்.
- இத்திட்டத்தில் சேரும் ஆதரவற்ற விதவைகள் தங்கள் வாழ்நாளில் ஒரே ஒரு முறை மட்டுமே இக்கட்டண விலக்கைப் பெற முடியும்.

...4

மேற்கண்ட திட்டத்திற்கு செயல்வடிவம் கொடுக்கும்பொருட்டு, இளநிலை, முதுநிலை, சான்றிதழ் பட்டயம், முதுநிலை பட்டயம், தொழிற்கல்வி பட்டயம், உயர் தொழிற் பட்டயம் ஆகிய படிப்புகளில் சேர்க்கை பெறும் சிறைக்கைதிகள், திருநங்கைகள், மற்றும் ஆதரவற்ற விதவைகளுக்கு அனைத்து வகையான கட்டணங்களிலிருந்தும் விலக்களிப்பதற்கு ஒப்பந்தம் பெறப்பட்டுள்ளது என்றும், இவர்கள் பட்டச் சான்றிதழ் கட்டணம் (Convocation Fee) மட்டுமே செலுத்த வேண்டும் என்றும், மற்றும் இத்திட்டத்திற்கான மொத்த செலவுத் தொகை, பல்கலைக்கழகத்தின் சொந்த நிதியிலிருந்து செலவிடப்படும் என்றும் தெரிவித்துள்ளதுடன், இத்திட்டத்தினை, வரும் கல்வியாண்டு 2022-23 முதல் செயல்படுத்தும்பொருட்டு, உரிய நிர்வாக அனுமதி வழங்குமாறு அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

3. மேற்கண்ட தமிழ்நாடு திறந்த நிலைப் பல்கலைக்கழகப் பதிவாளரின் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்து, சிறைக்கைதிகள், திருநங்கைகள் மற்றும் ஆதரவற்ற விதவைகளின் சேர்க்கை விகிதத்தை உயர்த்துவதற்காகத் தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தில், கட்டணமின்றி பயின்று பட்டம் பெறும் திட்டத்தினை, மேலே பத்தி 2-இல் தெரிவிக்கப்பட்டுள்ள செயல்முறைகளைப் பின்பற்றி 2022-23 ஆம் கல்வியாண்டு முதல் செயல்படுத்துவதற்கு, தமிழ்நாடு திறந்தநிலை பல்கலைக்கழகத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கலாம் என முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

தா. கார்த்திகேயன்
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
பதிவாளர், தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம், சென்னை-15
கல்லூரிக் கல்வி இயக்குநர், சென்னை-6.
மாநில (தணிக்கை-1) கணக்காயர், சென்னை-18.
உள்ளுறை கணக்காயர், மாநில கணக்காயர் அலுவலகம், தலைமைச் செயலகம், சென்னை-9.

நகல்:
உயர்கல்வித் துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை - 9.
உயர்கல்வித் துறை முதன்மைச் செயலாளரின் தனிச் செயலர், சென்னை-9.
உள் துறை முதன்மைச் செயலாளரின் தனிச் செயலர், சென்னை-9.
சமூக நலம் மற்றும் மகளிர் உரிமைத் துறை முதன்மைச் செயலாளரின் தனிச் செயலர், சென்னை-9.
இ.கோ / உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்
7.6.22